## வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனி - 2019

---

### 1.1 அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியின் (“கம்பனி”) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகளை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### முக்கியத்துவமான விடயங்கள்

முனைப்பழி அபிப்பிராயம் இன்றி,நிதி கூற்றுக்களின் குறிப்பு 1.2 இனை எனது கவனத்தில் கொள்கின்றேன்.மேலே கூறப்பட்டுள்ள குறிப்பின் படி,தாய் கம்பனியாக பொறுப்பேற்று மற்றும் கட்டுப்படுத்துவது அரசாங்கத்தால் இயக்கப்படும் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்(எம்எச்இஎஸ்ரிஎவ்) ஆகும். 28 ஆகஸ்ட் 2018 இல் நடத்தப்பட்ட கூட்டத்தில் அமைச்சரவை குழுவானது வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியினை கலைப்பதற்கும் மற்றும் மத்திய வங்கியின் அனுமதியின் கீழ் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியினை வேறு முதலீட்டாளரிற்கு விற்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது.எவ்வாறயினும்,மேலே கூறப்பட்ட அமைச்சின் தீர்மானத்தை திருத்தியமைப்பதற்கு நெட் வெல்த் செக்யூரீட்டிஸ் கம்பனியின் 49 சதவீத பங்கு மூலதனத்தை மட்டும் விற்பனை செய்வதற்கும் மற்றும் வரையறுக்கப்பட்ட நெட் வெல்த் செக்யூரீட்டிஸ்ஸின் மறுகட்டமைப்பு முறை முடிவடையும் வரைக்கும் வரையறுக்கப்பட்ட நெசனல் வெல்த் கோப்பரேசன் கம்பனியின் கலைப்பை இடை நிறுத்துவதற்காகவும் 26 பெப்ரவரி 2020 திகதியிடப்பட்ட புதிய அமைச்சரவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும், மத்திய வங்கியின் ( சிபிஎஸ்எல்) பணச்சபை,31 மே 2019 இல் தொடங்கும் ஆறு மாத காலத்திற்கு கம்பனி முதற்தர வணிகராக வியாபார நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளில் செயற்படுவதற்கு இடை நிறுத்தியது.30 நொவெம்பர் 2019 இல், சிபிஎஸ்எல் மேலே கூறப்பட்ட ஆறு கால மாதத்திற்கான இடை நிறுத்தத்தை நீக்கி இருந்தது.மீண்டும், சிபிஎஸ்எல் 01 யூன் 2020 இல் தொடங்கும் ஆறு மாத காலத்திற்கு கம்பனி முதற்தர வணிகராக வியாபார நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இடை நிறுத்தியது.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகளிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியினை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனியின் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த

இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கலின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அ) கம்பனியின் முன்னாள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் முன்னாள் பிரதான வணிகரால் வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ் (தனியார்) கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட வேர்ச்சுஅல் இன்வெஸ்ட்மென்ட் அன்ட் ட்ரேடிங் லங்கா (தனியார்) ஆகிய இரண்டு கம்பனிகளின் ஊடாக முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்டதாக கம்பனி வெளிப்படுத்தியது. கம்பனியின் முதலீட்டு குழுவினால் முதலீட்டு தீர்மானங்கள் எடுக்க வேண்டிய போதிலும், மேலே குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் கம்பனியின் எந்த அனுமதியும் பெறாமல் கொடுக்கல் வாங்கல்களிற்கான முதலீட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டது. | எங்களது பார்வையானது ஊழியர்களின் வசதிக்காக முரண்பாட்டுடான ஆர்வத்துடன் மேற்கொள்ளப்பட்ட மோசடியான பரிவர்த்தனைக்காக என்டபில்யுஎஸ்எல் மதிப்பளிப்பது கட்டாயமில்லை. | அனைத்து முதலீட்டு தீர்மானங்களும் கம்பனியின் முதலீட்டு குழுவினால் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. மற்றும் இந்த விடயம் பற்றி உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை மத்திய வங்கியானது (சீ.பி.எஸ்.எல்) 2009 யூன் 24 ஆம் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க உள்ளூர் திறைசேரி பிணைகள் (ஆரம்ப விநியோகஸ்தர்) பிரமாணங்களின் 11(2) ஆம் பிரமாணங்கள் மற்றும் 2009 யூன் 24 ஆம் திகதிய 2009 இன் 01 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் (ஆரம்ப விநியோகஸ்தர்) இன் 11(2) இன் பிரமாணங்களினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு | இவை இரண்டு தொடர்பான நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் வழங்கப்பட்ட 07 ஆகஸ்ட் 2015 திகதியிடப்பட்ட வழிகாட்டலின் படி எடுக்கப்பட்டது. நாங்கள் 29 ஜீலை 2016 இன் உயர்நீதி மன்ற வழக்கின் தீர்ப்பினை கவனத்தில் கொள்ள விரும்புகின்றோம், என்டபில்யுஎஸ்எல் | இந்த விடயம் பற்றி சிபீஎஸ்எல் இடம் இருந்து அவசர தீர்மானத்தை பெறுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

வாடிக்கையாளர்களுடனான பிரதான மீள்கொள்வனவு உடன்படிக்கையின் உறுப்புரைகளின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட வாடிக்கையாளர்களினால் மீள்கொள்வனவு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய எல்லா நிலுவைகள் தொடர்பாகவும் அறிவுறுத்தி கம்பனிக்கு 2015 ஆகஸ்ட் 07 இல் உத்தரவு ஒன்றினை விநியோகித்திருந்தது. சீபிஎஸ்எல் இந்த உத்தரவை மீளப்பெற்றிருக்காமையால் கம்பனி அதன் பிரகாரம் செயற்படுவதற்கான பொறுப்பினை கொண்டுள்ளது.

(இ) கம்பனி சீ.பி.எஸ்.எல் இனால் மேற்கொள்ளப்பட்ட வழிகாட்டலுக்கு எதிராக 2015 ஆகஸ்ட் 18 இல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் முறையீடு ஒன்றினை பதிவு செய்திருந்ததுடன் மேல் முறையீட்டு நீதிமன்றமானது 2015 செப்ரெம்பர் 04 வரை சொல்லப்பட்ட உத்தரவை செயல்படுத்த வேண்டாம் என இடைக்கால தடை உத்தரவு ஒன்றினை பிறப்பித்திருந்தது. எவ்வாறாயினும், எல்லா பொறுப்பான தரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுதல்களினை கருத்திற் கொண்டதன் பிறகு, 2016 மார்ச் 29 இல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் மேற்படி இடைக்கால உத்தரவானது திருப்பிப் பெறப்பட்டிருந்தது. பின்னர் மேல் முறையீட்டு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக கம்பனி 2016 ஏப்ரல் இல் உச்சநீதிமன்றத்தில் மற்றுமொரு முறையீட்டினை மேற்கொண்டது. ஆனால் உச்ச நீதிமன்றத்தால் கம்பனிக்கு சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.இருந்த போதிலும், கம்பனி 2016 திசெம்பர் 27 இல் சீபிஎஸ்எல் இற்கு தடையவியல் கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பித்திருந்தது .எவ்வாறாயினும், சீபிஎஸ்எல் இந்த அறிக்கைத் திகதி வரை இது தொடர்பாக கம்பனிக்கு எந்த உத்தரவும் வழங்கியிருக்கவில்லை.எவ்வாறாயினும வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ்ஸானது கம்பனிக்கு எதிராக வழக்கு பதிவு செய்தது.02 நொவம்பர் 2018 இல் தீர்ப்பு கிடைக்கப் பெற்றது.உயர் நீதிமன்ற தீர்ப்பின் படி,கம்பனியானது வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ்ஸிற்கு ரூபா 53,830,745 தொகையினை 25 ஜீலை 2014 விதிமுறையின் 12 ஆம் பிரிவின் கீழ் வேறு ஏதும் நடவடிக்கைக்காக இடை நிறுத்துவதற்கு ஏதும் நடவடிக்கை எடுக்க முன்னர் அறிவிப்பதற்கு மற்றும் அத்தகைய எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கு முன்னர் என்டபில்யுஎஸ்எல் ற்கு கேட்கும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.தொழில்முறை சட்ட அபிப்பிராயம் எங்களது சட்ட தலைவர் ஆலோசனை பிரதிநிதி திரு ரொனால்ட் பெரேராவிடம் இருந்து உங்களது திணைக்களத்திற்கு 25 ஒக்ரோபர் 2017 திகதியிடப்பட்ட எமது கடிதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது.29 ஜீலை 2016 இன் உயர் நீதி மன்றத்தின் வழக்கின் தீர்ப்பிற்கு மற்றும் 27 டிசம்பர் 2016 இன் தடய கணக்காய்வு அறிக்கையின் பற்று சீட்டிற்கு எதிராக சிபிஎஸ்எல் இனால் எதுவித வழிகாட்டலோ அறிவுறுத்தலோ கொடுக்கப்படவில்லை என்பதை நாங்கள் அவதானித்தோம்.கம்பனி 02 நொவெம்பர் 2018 இல் வரையறுக்கப்பட்ட ரில்லியன் செக்யூரிட்டீஸ்ஸால் பதிவு செய்யப்பட்ட வழக்குக்கு தீர்ப்பு கிடைக்கப் பெற்றது.ஆனால் மேல் நீதி மன்றத்தில் கம்பனிக்கு சார்பாக தீர்ப்பு கிடைக்கப்பெறவில்லை.ஆகையால் கம்பனி 16 நொவெம்பர் 2018 இல் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது.

கம்பனி செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டியினையும் சேர்த்து அடுத்த வருட இறுதி கணக்கில் ஏற்பாடு செய்ய வேண்டும் என பரிந்துரைக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| இல் இருந்து ஆண்டுக்கு 14 வீத வட்டியுடன் மற்றும் ரூபா 72,519 தொகையினை 31 ஜீலை 2014 இல் இருந்து ஆண்டுக்கு 14 வீத வட்டியுடன் செலுத்த வேண்டும். | | |
| (ஈ)2014 இல் இரண்டு தனியார் கம்பனிகளுக்கு (வைட் க்ரோவ் ஹோல்டிங்ஸ் மற்றும் அஸ்ட்ரல் ஹெப்பிடல் ஹோல்டிங்ஸ்) செலுத்திய அனுமதிக்கப்படா தரகுக் கட்டணம் ரூபா 19,725,000 தொடர்பில் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் (சீஐடி) கம்பனி முறைப்பாடு ஒன்றினைச் செய்திருந்தது. கட்டணத்தை செலுத்துவதற்கு முன்னர் இந்த இரண்டு கம்பனிகளும் சீபிஎஸ்எல் இல் நிதிக்கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தியிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | நாங்கள் 2016 இல் சீஐடி யில் இந்த அனுமதிக்கப்படாத தரகுக் கட்டணங்களின் பயனாளர்களை விசாரணை செய்வதற்கு முறைப்பாடு செய்தோம். | இந்த விடயம் பற்றி உடனடி தீர்மானம் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

-------------------------------------------------------------------------------------------------------------------------------

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 9.1 ஆம் பந்தி | ஊழியரின் உற்பத்தி திறனை அதிகரிக்க சரியான திறமையுடன் பதவியியனரை கொண்டிருக்க வேண்டும்.எனினும், மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு சபையிடம் இருந்து கம்பனியின் பதவியியனரிற்கு அனுமதி பெறப்படவில்லை. | இயக்குனர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கம்பனி மற்றும் தொகுதியின் பதவியியனர் மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கை பொறுப்பு சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.நாங்கள் அனுமதியை பெறுவதற்கு காத்திருக்கின்றோம். | கம்பனி இந்த ஒழுங்குமுறைக்கு இணங்க வேண்டும். |

**1.7 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ)கம்பனியின்2008/2009,2009/2010,2010/2011, 2011/2012 ,2013/2014 ,2014/2015 மற்றும் 2015/2016 மதிப்பீட்டு ஆண்டுகளிற்கான முறையே ரூபா 24,136,857, ரூபா 77,382,317,ரூபா 84,378,708, ரூபா 66,181,759,ரூபா 18,288,933, ரூபா 113,687,212 மற்றும் ரூபா 36,466,487 பெறுமதியுடைய வருமான வரி மதிப்பீடு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்டது. கம்பனி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீடுகளின் அறிவிப்புக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தது. மேலே கூறப்பட்ட மதிப்பீடுகளிற்கு 50 சதவீத தண்டப்பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்தது | இரண்டாம் ஏற்பாட்டின் பிரிவு 32(1) இன் படி,இறை வருமான சட்டத்தினால் அரச பங்குகளில் பெறப்படும் வட்டி வருமானமானது,முதல் தர சந்தை கொடுக்கல் வாங்கல்களிற்காக அத்தகைய பங்குகளில் வரி கழிக்கப்படுமானால் குறிப்பிட்ட வட்டி வருமானம் சட்ட ரீதியான வருமானத்தை கணிப்பிடும் நோக்கத்திற்காக வியாபார பற்றுச்சீட்டாக கருத்தில் கொள்ளப்படமாட்டது.ஆகையால் வழங்கப்பட்ட வருமான வரி மதிப்பீடு குறிப்பிட்ட ஏற்பாட்டின் காரணத்தால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. | கம்பனி வரியை தீர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் பின் தொடர வேண்டும்.இயக்குனர் சபை இதன் வரி நிலைமையினை வரி சேவையாளரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்ய வேண்டும் மற்றும் தேவையான திருத்தங்கள் காணப்பட்டால் நிதி கூற்றுக்களில் மேற் கொள்ள வேண்டும். |
| (ஆ)கம்பனியானது 2013 ஆம் ஆண்டில் ரூபா 16,600,601 பெறுமதியுடைய மற்றும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 58,097,943 பெறுமதியுடைய நிதி சேவைகளின் பெறுமதி சேர் வரிக்கான மதிப்பீட்டு அறிவுறுத்தலை இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெற்றிருந்தது. கம்பனி இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கூறப்பட்ட அறிவுறுத்தலிற்கு எதிராக மேல் முறையீடு செய்தது. மேலே கூறப்பட்ட மதிப்பீடுகளிற்கு 50 சதவீத தண்டப்பணம் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்தது | கம்பனி முகாமைத்துவத்தின் அபிப்பிராயமானது, கம்பனி நிதி சேவைகளை வழங்கும் வியாபாரமாக இல்லாததால் கம்பனி பிரிவு 25 (அ) இன் கீழ் வற் செலுத்தவில்லை. | கம்பனி வரியை தீர்ப்பதற்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துடன் பின் தொடர வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 224,420,525 தொகையான இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 243,412,073 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 467,832,598 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. வட்டி செலவு ரூபா 284,376,048 ஆல்

குறைவடைந்தமை மற்றும் ரூபா 319,772,260 பெறுமதியான கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் இருந்து பெற்ற இலாபம் என்பன முன்னேற்றத்துக்கான காரணங்களாகும்.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டன.

(அ) 2019 ஆம் ஆண்டிற்கான வட்டி செலவு ரூபா 119,096,047 தொகையானது முன்னைய ஆண்டின் வட்டி செலவு ரூபா 403,472,095 தொகையுடன் ஒப்பிடுகையில் கம்பனி வட்டி செலவில் 70 சதவீத வீழ்ச்சியை காட்டுகின்றது.

(ஆ) 2019 ஆம் ஆண்டிற்கான கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் இருந்து பெறும் மூலதன இலாபம் ரூபா 152,014,625 தொகையானது முன்னைய ஆண்டின் கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் இருந்து பெறும் மூலதன நட்டம் ரூபா 167,757,635தொகையுடன் ஒப்பிடுகையில் கையாளும் பங்கின் மீள் மதிப்பீட்டில் 190 சதவீத அதிகரிப்பினை காட்டுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய வங்கியின் நாணயசபை கம்பனியின் உரிமையாண்மை மறுகட்டமைப்பு திட்டத்தை முடிவுறுத்தல் மற்றும் மறுகட்டமைப்பு முடியும் வரை மாதாந்தம் மத்திய வங்கிக்கு அமுலாக்கம் தொடர்பாக செயற்பாடுகளை அறிக்கையிட வேண்டும்,மறுகட்டமைப்பு முடிவடையும் வரை இயக்குனர்கள் சபையில் இருந்து விலகுவதற்கு கட்டுப்பாடு விதித்தல்,கம்பனி எந்த நேரத்திலும் அனைத்து சட்டங்கள்,பிரமாணங்கள் மற்றும் வழிகாட்டல்களுடன் இணங்குதல் மற்றும் அரசாங்க பிணைகளின் இரண்டாம் தர சந்தையில் வினைத்திறனான பங்குபற்றல் மற்றும் தள பரிசோதனையை மேற்பார்வை செய்வதில் திருத்தத்தை அதிகரித்தல் போன்ற நிபந்தனைகளுடன் முதற்தரவணிகராக கம்பனியின் வியாபார மற்றும் செயற்பாடுகளை ஆறு மாத காலத்திற்கு இடை நிறுத்துவைத நீக்கம் செய்தது. | கம்பனியால் நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக எதிர்பார்த்த மறுகட்டமைப்பு திட்டத்தை சமர்ப்பிக்க முடியவில்லை மற்றும் புதிய அமைச்சரவை தீர்மானத்தை பெறுவதற்கு கம்பனியால் உயர்கல்வி தொழில்நுட்பம் & புத்தாக்க அமைச்சினை தொடர்பு கொள்ள முடியவில்லை,ஜனாதிபதி செயலாளரின் வழிகாட்டலில் அனைத்து அமைச்சின் செயலளகங்களிற்கும் நிறுவனத்தின் தலைவர் மற்றும் சபை உறுப்பினர்களை பதவி விலகுமாறு வேண்டுகோள் விடுவித்தமையால் தலைவர் மற்றும் ஒரு இயக்குனர் கம்பனியின் இயக்குனர் சபையில் இருந்து பதவி விலகினர், இடை நீக்கத்தை நீக்கியதன் பின்னர் முதற்தர | கம்பனி உரிமையாண்மை மறுகட்டமைப்பு திட்டத்தை முடிக்க வேண்டும் மற்றும் முதற்தர மற்றும் இரண்டாம் தர சந்தையில் பங்குபற்றுவதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| எனினும், கம்பனி நிபந்தனைகளுடன் இணங்குவதற்கு தவறிவிட்டது மற்றும் கம்பனி முதற்தர வணிகராக 6 மாத காலத்திற்கு வியாபார நடவடிக்கைகளை நடத்துவதற்கு இடை நீக்கப்பட்டது. | வணிகராக நிலைத்திருப்பதற்கு தவறியதால் முதல்தர மற்றும் இரண்டாம் தர சந்தையில் செயற்பட முடியாமை மற்றும் கம்பனி இடைநிறுத்தத்தை நீக்கியதன் பின்னர் ஏற்பட்ட காலத்தில் குறைவான அளவு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றமையால் தள பரிசோதனையில் செயற்பாட்டு இடர் அதிகரிக்கப்பட்டமை போன்ற காரணத்தால் கம்பனியால் நிபந்தனைகளுடன் இணங்கமுடியவில்லை. | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி 2018-2020 ற்கான தந்திரோபாய வணிக திட்டத்தினை தயாரித்தது.எனினும்,சந்தை நிலைமைகளின் படி திருத்தியமைக்கப்பட்ட தந்திரோபாய வணிக திட்டத்தினை தயாரிக்கவில்லை. | 2018-2020 ற்கான தந்திரோபாய வணிக திட்டமானது 2017 ஆம் ஆண்டிற்கான அந்த நேரத்தின் பிற்பகுதியில் காணப்பட்ட சந்தை நிலவரங்களின் படி மற்றும் எதிர்கால எதிர்வுகூறலின் படி தயாரிக்கப்பட்டது.எனினும் 2019 ஆம் ஆண்டிற்கான புதிய பாதீடு 14 டிசம்பர் 2018 இல் இயக்குனர் சபையால் கம்பனியால் எதிர்நோக்கும் பிரச்சனையை கருத்திற் கொண்டு அனுமதிக்கப்பட்டது. | கம்பனி சந்தை நிலைமையை கருத்திற் கொண்டு தந்திரோபாய வணிக திட்டத்தினை தயாரிக்க வேண்டும். |